# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்),எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.24347590

**<u>ஆணை நாள் 04.11.2020</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு ரா. ராஜகோபால், இ.ஆ.ப., (ஓ)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 2774/SCIC/2020</u>**

திரு வ. போஸ் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்

பொதுத் தகவல் அலுவலர்/
கண்காணிப்பாளர் 'ஜி' பிரிவு,
பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
சென்னை -- பொது அதிகார அமைப்பு

**<u>ஆணை</u>**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் 06.12.2019 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவில் தமிழ்நாட்டில் உள்ள பத்திரப்பதிவு அலுவலகங்களில் பராமரிக்கப்படும் பதிவேடுகளில் ஜனவரி 1ம்தேதி, ஞாயிற்றுக்கிழமை மற்றும் ஜனவரி 1ம்தேதி ஞாயிற்றுக் கிழமையாக இருந்து அரசு விடுமுறை நாளில் பிறப்பு பதிவேட்டில் தகவலின் பேரில் பிறப்ப பதிவு செய்யப்பட்டிருந்தால் எந்த ஆண்டில், எந்த உரில் பிறப்ப பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற விவரங்களைக் கோரியுள்ளார்.

2. பொதுத் தகவல் அலுவலர் கடித எண். 51197/G1/2019 நாள் 30.12.2019 என்ற கடிதத்தின் வாயிலாக தகவல்கள் தெரிவித்துள்ளார். மனுதாரர் பிரிவு 19 (1)-ன்கீழ் 21.01.2020-ல் தமது முதல் மேல் முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் கடித எண். 2582/G1/2020 நாள் 17.02.2019 என்ற கடிதத்தின் வாயிலாக தகவல்கள் தெரிவித்துள்ளார். நிலையில் மனுதாரர், பிரிவு 19 (3)-ன்கீழ் 04/03/2020-ல் தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு இரண்டாம் மேல் முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார்.

3. மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது இவ்வாணையத்தால் 03/09/2020-ல் பிறப்பிக்கப்பட்ட ஆணையில், மனுதாரர் கோரும் தகவல்களை மனுதாரருக்கு வழங்க பொதுத் தகவல்

அலுவலருக்கு ஆணையிடப்பட்டது. மனுதாரருக்கு எவ்வித தகவல்களும் வழங்கப்படவில்லை என்றாலோ, முழுமையற்ற தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ அல்லது தவறான, குறைபாடான தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ, மனுதாரர் ஆணையத்திற்கு தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

4. மேற்கண்ட உத்தரவிற்கிணங்க பொதுத் தகவல் அலுவலர் க.எண். 24237/G1/2020-2 நாள் 23.09.2020 என்ற கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அதன் நகலினையும் ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார்.

5. அதனடிப்படையில் வழக்கு 08.10.2020 அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மனுதாரரின் கோரிக்கை குறித்து பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய பதில்கள் முறையானதாக இல்லையென்பதை பொதுத் தகவல் அலுவலர் ஒப்புக்கொண்டார். திருத்திய பதிலினை மனுதாரருக்கு வழங்குவதற்கு காலஅவகாசம் வழங்கப்படுகிறது. வழக்கின் விசாரணை 16.10.2020க்கு ஒத்திவைக்கப்பட்டது.

6. அதன்பின்னர் வழக்கு 16.10.2020 அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மனுதாரர் ஜனவரி 1ம் தேதி அன்று தமிழ்நாட்டில் பதிவுசெய்யப்பட்ட அனைத்து பிறப்புகளின் விவரங்களையும் கோரியுள்ளார். இத்தகைய விவரங்களை ஒரு சார்பதிவாளர் அலுவலகத்தால் வழங்க முடியும் என்று மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது. அதன்படி சின்னமனூர் கிராமம் அடங்கிய சார்பதிவாளர் அலுவலகத்திற்கு ஆணைகளை வழங்க மனுதாரர் கேட்டுக்கொண்டார். இதை பொதுத் தகவல் அலுவலரும் ஏற்றுக்கொண்டு, சின்னமனூர் சார்பதிவாளர் அலுவலகத்தால் தகவல்கள் வழங்கப்படும் என்று தெரிவித்தார். வழக்கின் விசாரணை 27.10.2020க்கு ஒத்திவைக்கப்பட்டது.

7. அதன்பின்னர் வழக்கு 27.10.2020 அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அன்றைய விசாரணையின்போது மனுதாரர் தமக்கு தகவல்கள் வரப்பெறவில்லை என்று தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலர் அனைத்து தகவல்களையும் சின்னமனூர் சார்பதிவாளர் மூலமாக வழங்குவதாக உறுதியளித்தார். 31.10.2020 தேதிக்குள் அனைத்து தகவல்களும் சின்னமனூர் சார்பதிவாளர் மூலமாக மனுதாரருக்கு சென்று சேரவேண்டும் என்று உத்தரவிடப்பட்டு வழக்கு 04.11.2020 தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

8. அதன்பின்னர் வழக்கு 04.11.2020 அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அன்றைய விசாரணையின்போது பொதுத் தகவல் அலுவலர் கடித எண்.24237/G1/2020 நாள் 31.10.2020 என்ற கடிதத்தின் வாயிலாக சின்னமனூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு மனுதாரருக்கு உரிய தகவல்களை வழங்குமாறு தெரிவித்து கடிதம் அனுப்பியதாகவும், அதன் அடிப்படையில் சின்னமனூர் சார்பதிவாளர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் ந.க.எண்.107/2020 நாள் 02.11.2020 என்ற கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும்

தெரிவித்தார். அதன் நகல் ஆணையத்திலும் பெறப்பட்டுள்ளது. மனுதாரரும் தனது கோரிக்கைகளுக்கு அனைத்துத் தகவல்களையும் பொதுத் தகவல் அலுவலர் வழங்கிவிட்டதாகவும், பெறப்பட்ட தகவல்களில் தான் மனநிறைவு அடைவதாகவும் தெரிவித்தார். **அதன் அடிப்படையில், வழக்கை முற்றாக்கி ஆணையிடப்படுகிறது.**

**ஒம்/-(ரா. ராஜகோபால்)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**வழக்கு எண். SA 2774/SCIC/2020**
பெறுநர்

பொதுத் தகவல் அலுவலர்,
கண்காணிப்பாளர் 'ஜி' பிரிவு,
பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம், சென்னை 600 028

மனுதாரர்

திரு வ. போஸ்,
வார்டு 26, 41 D, வெள்ளையன் தெரு,
கருங்கட்டாங்குளம்,
சின்னமனூர் 625 515

TK/PA 04/11/2020

பதிவுத்தபால் ஒப்புகை அட்டையுடன் (RPAD)

/பதிவுத்துறை/

அனுப்புநர்
பொதுத்தகவல் அலுவலர் மற்றும்
"ஜி" பிரிவு கண்காணிப்பாளர்,
பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
சென்னை - 600028

பெறுநர்
பொதுத்தகவல் அலுவலர் மற்றும்
சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
சின்னமனூர்
பெரியகுளம் பதிவு மாவட்டம்

கடித.எண்.24237/G1/2020 நாள்.31.10.2020

அய்யா,

பொருள்: தகவல் அறியும் உரிமை சட்டம் 2005 – திரு.வ.போஸ், கோரிய தகவல்கள் - தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் மேல்முறையீடு செய்தது வழக்கு எண்.SA2774/மா.த.த.ஆ /2020 - தொடர்பாக.

பார்வை :
1. திரு.வ.போஸ், போடிநாயக்கனூர் இரண்டாவது மேல்முறையீடு மனு நாள். இல்லை (தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் ஆணையாளருக்கு முகவரிக்கப்பட்டது)
2. மாநில தலைமை தகவல் ஆணையர், தமிழ்நாடு தகவல் ஆணையம் விசாரணை நாள் 27.10.2020
3. கூடுதல் பதிவுத்துறைத்தலைவர்(புலனாய்வு) கடித எண்.24237/ஜி1/2020 நாள்: 27.10.2020
4. பொது தகவல் அலுவலர் மற்றும் சார்பதிவாளர், சின்னமனூர்/ பெரியகுளம் பதிவு மாவட்டம் கடித எண்.107/2020 நாள்: 27.10.2020
5. மாநில தலைமை தகவல் ஆணையர், தமிழ்நாடு தகவல் ஆணையம் விசாரணை நாள் 31.10.2020

*****

தகவல் அறியும் உரிமை சட்டம், 2005 பிரிவு 19(3)-ன் கீழ் தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு செய்யப்பட்ட பார்வை (1)ல் காணும் இரண்டாம் மேல்முறையீடு மனுவினை தொடர்ந்து 08.10.2020, 16.10.2020, 27.10.2020 மற்றும் 31.10.2020 ஆகிய தேதிகளில் மாநில தலைமை தகவல் ஆணையர் அவர்களால் விசாரணை நடத்தப்பட்டது.

இந்நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையம் மேல்முறையீட்டு வழக்கு எண்.SA2774/மா.த.த.ஆ/ 2020ல் மாநில தலைமை தகவல் ஆணையர் அவர்களால் 16.10.2020 அன்று நடத்தப்பட்ட இரண்டாவது விசாரணையின் போது மனுதாரரால் சின்னமனூர் கருங்கட்டான்குளம் கிராமத்தினை பொறுத்து 60 ஆண்டு பிறப்பு பதிவேடுகளில் "ஜனவரி 1ம் தேதி விடுமுறை நாளில்/ ஞாயிற்று கிழமை அரசு விடுமுறை நாட்களில்/ஜனவரி 1ம் தேதி ஞாயிற்று கிழமையாக இருந்து அரசு விடுமுறை நாளில்" பிறப்பு பதிவேட்டில், தகவலின் பேரில் பிறப்பு பதிவு செய்யப்பட்டிருந்தால் அதன் விவரங்கள் கோருவதாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையம் மேல்முறையீட்டு வழக்கு எண்.SA2774/மா.த.த.ஆ/ 2020ல் மாநில தலைமை தகவல் ஆணையர் அவர்களால் 27.10.2020 அன்று 11.15 மணிக்கு தொலைபேசி மூலம் நடத்தப்பட்ட விசாரணையில் மாநில தலைமை தகவல் ஆணையர் அவர்களால் பின்வருமாறு ஆணையிட்டது

1) மனுதாரர் பிறப்பு சான்றுகளை கோரவில்லை.

2) மனுதாரர் தகவல்களை மட்டுமே கோருகிறார்.

3) பெரியகுளம் பதிவு மாவட்டம் சின்னமனூர் சார்பதிவகத்தில் உள்ள சின்னமனூர் கருங்கட்டான்குளம் கிராமம் தொடர்பான 60 ஆண்டு பிறப்பு பதிவேடுகளில் மனுதாரர் கோரும் தகவல்களை 29.10.2020க்குள் பெரியகுளம் பதிவு மாவட்டம் சின்னமனூர் சார்பதிவாளர் (பொது தகவல் அலுவலர்) மனுதாரருக்கு வழங்கி அதன் விவரத்தினை தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு தெரிவிக்க வேண்டும்.

எனவே பார்வை(3)ல் காணும் கூடுதல் பதிவுத்துறைத்தலைவர்(புலனாய்வு) கடிதம் மூலம் மாநில தலைமை தகவல் ஆணையர் 27.10.2020 நாளிட்ட அவர்களின் ஆணையின்படி பெரியகுளம் பதிவு மாவட்டம் சின்னமனூர் சார்பதிவகத்தில் உள்ள சின்னமனூர் கருங்கட்டான்குளம் கிராமம் தொடர்பான 60 ஆண்டு பிறப்பு பதிவேடுகளில் உள்ள தகவல்களை கோருவதால், மனுதாரர் கோரும் தகவல்களை 29.10.2020க்குள் அளித்திட தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையம் மேல்முறையீட்டு வழக்கு எண்.SA2774/மா.த.த.ஆ/ 2020ல் மாநில தலைமை தகவல் ஆணையர் அவர்களால் 31.10.2020 அன்று 3.38 மணிக்கு தொலைபேசி மூலம் நடத்தப்பட்ட விசாரணையின் போது, மனுதாரரால் கருங்கட்டான்குளம் கிராமம் பொறுத்து மட்டுமே கோரிய தகவல் பார்வை(4)ல் காணும் கடித வழி அளிக்கப்பட்டுள்ளதாகவும், சின்னமனூர் கிராமத்தை பொறுத்து கோரிய தகவல் அளிக்க அளிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து தலைமை தகவல் ஆணையர் அவர்கள் பின்வருமாறு ஆணையிட்டுள்ளார்.

பெரியகுளம் பதிவு மாவட்டம் சின்னமனூர் சார்பதிவகத்தில் உள்ள சின்னமனூர் கிராமம் தொடர்பான 1903 முதல் 1962 வரையுள்ள 60 ஆண்டு கால பிறப்பு பதிவேடுகளில் மனுதாரர் கோரும் தகவல்களை 02.11.2020க்குள் அளிக்க வேண்டும் தவறின் பொது தகவல் அலுவலர் மற்றும் சார்பதிவாளர்,சின்னமனூர் மற்றும் பொது தகவல் அலுவலர் மற்றும் “ஜி” பிரிவு கண்காணிப்பாளர், பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம் ஆகியோருக்கு அபராதம் விதிக்க நேரிடும் எனத் தெரிவித்துள்ளார்.

எனவே தலைமை தகவல் ஆணையர் அவர்களின் 31.10.2020 நாளிட்ட ஆணையின்படி பெரியகுளம் பதிவு மாவட்டம் சின்னமனூர் சார்பதிவகத்தில் உள்ள சின்னமனூர் கிராமம் தொடர்பான 1903 முதல் 1962 வரையுள்ள 60 ஆண்டு கால பிறப்பு பதிவேடுகளில் மனுதாரர் கோரும் தகவல்களை 02.11.2020க்குள் மனுதாரருக்கு அளித்து அதன் விவரத்தினை மாநில தலைமை தகவல் ஆணையர், தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கும்/ பதிவுத்துறைத்தலைவர் அலுவலகத்திற்கும் தெரிவித்திட சின்னமனூர் சார்பதிவாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

31/10/2020

பொதுத்தகவல் அலுவலர் மற்றும்
"ஜி" பிரிவு கண்காணிப்பாளர்

நகல்:

1. மாநில தலைமை தகவல் ஆணையர் அவர்கள்,
   தமிழ்நாடு தகவல் ஆணையம்,
   எண்.2. தியாகராயர் சாலை,
   (ஆலையம்மன் கோவில் அருகில்)
   எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
   தேனாம்பேட்டை.
   சென்னை 600 018.(தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது)

2. மாவட்டப்பதிவாளர்,
   பெரியகுளம்
   (உரிய கண்காணிப்பிற்காக)

3. திரு.வ.போஸ், M.A.,
   தேனி மாவட்டம் அனைத்து
   அரசுப்பணி மாற்றுத்திறனாளிகள்,
   நலச்சங்க நிறுவனர்,
   41D, வெள்ளையன் தெரு,
   வார்டு எண்.26 கருங்கட்டான் குளம்,
   சின்னமனூர் - 625 515

// பதிவுத்துறை //

தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005

பதிவஞ்சலில் ஒப்புதல் அட்டையுடன்

அனுப்புநர்

வே.பாலமுருகன்,

பொது தகவல் அலுவலர்

மற்றும் சார்பதிவாளர் ,

சார்பதிவகம்,

சின்னமனூர்

தேனி மாவட்டம் - 625 515

பெறுநர்

திரு.வ.போஸ் அவர்கள்,

வார்டு-26,

41D, வெள்ளையன் தெரு,

கருங்கட்டாங்குளம்,

சின்னமனூர்-625515

ந.க.எண் 107 /2020 நாள் : 02.11.2020

அய்யா,

பொருள் : சார்பதிவகம், சின்னமனூர் - தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005 ன்கீழ் திரு.வ.போஸ், என்பவர் கோரிய தகவல்கள்- தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் மேல்முறையீடு செய்தது- வழக்கு எண் SA2774/மா.த.த.ஆ/2020 தொடர்பாக.

பார்வை :

1) உயர்திரு.மாநில தலைமை தகவல் ஆணையர், அவர்கள் தமிழ்நாடு தகவல் ஆணையம் அவர்களின் விசாரணை நாள் : 27.10.2020

2) உயர்திரு. சென்னை, கூடுதல் பதிவுத்துறைத்தலைவர் (புலனாய்வு) அவர்களின் கடித எண் 4237/G1/2020 நாள் : 27.10.2020

3) பொதுத் தகவல் அலுவலர் மற்றும் சார்பதிவாளரின் ந.க.எண். 107/2020 நாள்: 27.10.2020

4) ) உயர்திரு.மாநில தலைமை தகவல் ஆணையர், அவர்கள் தமிழ்நாடு தகவல் ஆணையம் அவர்களின் விசாரணை நாள் : 31.10.2020

5) பொதுத் தகவல் அலுவலர் மற்றும் "ஜி" பிரிவு கண்காணிப்பாளர், சென்னை பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம் கடித எண் 24237/G1/2020 நாள் : 31.10.2020

*************

பொருளில் குறித்துள்ள திரு.வ.போஸ் என்பவர் தகவல் அறியும் உரிமைச்சட்டம்

(கனிவுடன் திருப்புக)

...2...

பிரிவு 19(3) ன்கீழ் தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு இரண்டாவது மேல்முறையீடு செய்துள்ள மனு தொடர்பான பார்வை 4 இல் காணும் விசாரணையில் மாநில தலைமை தகவல் ஆணையர் அவர்கள் 31.10.2020 அன்று பிறப்பித்த ஆணைக்கிணங்கவும், பார்வை 2 இல் காணும் சென்னை பொதுத் தகவல் அலுவலர் மற்றும் "ஜி" பிரிவு கண்காணிப்பாளரின் கடிதத்தின்படியும் தகவல்கள் பின்வருமாறு அளிக்கப்படுகிறது.

பெரியகுளம் பதிவு மாவட்டம், சின்னமனூர் சார்பதிவக எல்கைக்குட்பட்ட சின்னமனூர் கிராமம் தொடர்பான 1903 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரையிலான பிறப்புப்பதிவேடுகளில் ஜனவரி 1 ஆம் தேதி பதிவு செய்யப்பட்ட குறிப்புகள் குறித்த தகவல்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சின்னமனூர் கிராம பிறப்புப்பதிவேட்டில் 1903 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரையிலான பிறப்புப்பதிவேடுகளில் ஞாயிற்றுக்கிழமை என குறிப்பிட்டு பதிவு செய்த குறிப்புகள் ஏதும் காணப்படவில்லை என்ற தகவல் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்புடன்

பொதுத் தகவல் அலுவலர் மற்றும்
சார்பதிவாளர்
சின்னமனூர்.
2.11.2020

சின்னமனூர் கிராமம் (1903 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு முடிய ஜனவரி 1ஆம் தேதி பதிவு செய்யப்பட்ட) பிறப்பு விபரம்

| வ.எண் | கிராமத்தின் பெயர் | ஆண்டு | பிறந்ததேதி | பதிவு செய்த தேதி |
|---|---|---|---|---|
| 01. | சின்னமனூர் | 1903 | 01.01.1903<br>01.01.1903 | 01.01.1903<br>01.01.1903 |
| 02. | | 1904 | பதிவு இல்லை | பதிவு இல்லை |
| 03. | | 1905 | 01.01.1905 | 01.01.1905 |
| 04. | | 1906 | 01.01.1906 | 01.01.1906 |
| 05. | | 1907 | பதிவு இல்லை | பதிவு இல்லை |
| 06. | | 1908 | 30.12.1907 | 01.01.1908 |
| 07. | | 1909 | 01.01.1909 | 01.01.1909 |
| 08. | | 1910 | பதிவு இல்லை | பதிவு இல்லை |
| 09. | | 1911 | பதிவு இல்லை | பதிவு இல்லை |
| 10. | | 1912 | 01.01.1912 | 01.01.1912 |
| 11. | | 1913 | 01.01.1913 | 01.01.1913 |
| 12. | | 1914 | 25.12.1913 | 01.01.1914 |
| 13 | | 1915 | 31.12.1914<br>30.12.1914 | 01.01.1915<br>01.01.1915 |
| 14. | | 1916 | 31.12.1915 | 01.01.1916 |
| 15. | | 1917 | பதிவு இல்லை | பதிவு இல்லை |
| 16. | | 1918 | பதிவு இல்லை | பதிவு இல்லை |
| 17. | | 1919 | 01.01.1919 | 01.01.1919 |
| 18. | | 1920 | 31.12.1919 | 01.01.1920 |
| 19. | | 1921 | பதிவு இல்லை | பதிவு இல்லை |
| 20. | | 1922 | பதிவு இல்லை | பதிவு இல்லை |
| 21. | | 1923 | பதிவு இல்லை | பதிவு இல்லை |

சின்னமனூர் கிராமம் (1903 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு முடிய ஜனவரி 1ஆம் தேதி பதிவு செய்யப்பட்ட) பிறப்பு விபரம்

| வ.எண் | கிராமத்தின் பெயர் | ஆண்டு | பிறந்ததேதி | பதிவு செய்த தேதி |
|---|---|---|---|---|
| 22 | சின்னமனூர் | 1924 | 01.01.1924 | 01.01.1924 |
| | | | 30.12.1923 | 01.01.1924 |
| | | | 31.12.1923 | 01.01.1924 |
| 23 | | 1925 | பதிவு இல்லை | பதிவு இல்லை |
| 24 | | 1926 | பதிவு இல்லை | பதிவு இல்லை |
| 25 | | 1927 | பதிவு இல்லை | பதிவு இல்லை |
| 26 | | 1928 | 30.12.1927 | 01.01.1928 |
| | | | 01.01.1928 | 01.01.1928 |
| 27 | | 1929 | 01.01.1929 | 01.01.1929 |
| | | | 01.01.1929 | 01.01.1929 |
| | | | 01.01.1929 | 01.01.1929 |
| | | | 01.01.1929 | 01.01.1929 |
| 28 | | 1930 | 01.01.1930 | 01.01.1930 |
| | | | 27.12.1929 | 01.01.1930 |
| | | | 28.12.1929 | 01.01.1930 |
| | | | 31.12.1929 | 01.01.1930 |
| 29 | | 1931 | பதிவு இல்லை | பதிவு இல்லை |
| 30 | | 1932 | பதிவு இல்லை | பதிவு இல்லை |
| 31 | | 1933 | பதிவு இல்லை | பதிவு இல்லை |
| 32 | | 1934 | பதிவு இல்லை | பதிவு இல்லை |
| 33 | | 1935 | பதிவு இல்லை | பதிவு இல்லை |
| 34 | | 1936 | 01.01.1936 | 01.01.1936 |
| 35 | | 1937 | பதிவு இல்லை | பதிவு இல்லை |
| 36 | | 1938 | பதிவு இல்லை | பதிவு இல்லை |

...5...

| வ.எண் | கிராமத்தின் பெயர் | ஆண்டு | பிறந்ததேதி | பதிவு செய்த தேதி |
|---|---|---|---|---|
| 37 | சின்னமனூர் | 1939 | 01.01.1939 | 01.01.1939 |
| 38 | | 1940 | பதிவு இல்லை | பதிவு இல்லை |
| 39 | | 1941 | பதிவு இல்லை | பதிவு இல்லை |
| 40 | | 1942 | பதிவு இல்லை | பதிவு இல்லை |
| 41 | | 1943 | பதிவு இல்லை | பதிவு இல்லை |
| 42 | | 1944 | 01.01.1944 | 01.01.1944 |
| 43 | | 1945 | 01.01.1945 | 01.01.1945 |
| 44 | | 1946 | பதிவு இல்லை | பதிவு இல்லை |
| 45 | | 1947 | 01.01.1947 | 01.01.1947 |
| 46 | | 1948 | 01.01.1948 | 01.01.1948 |
| 47 | | 1949 | 01.01.1949 | 01.01.1949 |
| 48 | | 1950 | 01.01.1950 | 01.01.1950 |
| 49 | | 1951 | 01.01.1951 | 01.01.1951 |
| 50 | | 1952 | 31.12.1951<br>01.01.1952 | 01.01.1952<br>01.01.1952 |
| 51 | | 1953 | 31.12.1952<br>30.12.1952 | 01.01.1953<br>01.01.1953 |
| 52 | | 1954 | 01.01.1954 | 01.01.1954 |
| 53 | | 1955 | பதிவு இல்லை | பதிவு இல்லை |
| 54 | | 1956 | 31.12.1955<br>07.12.1955 | 01.01.1956<br>01.01.1956 |
| 55 | | 1957 | பதிவு இல்லை | பதிவு இல்லை |

சின்னமனூர் கிராமம் (1903 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு முடிய ஜனவரி 1ஆம் தேதி பதிவு செய்யப்பட்ட) பிறப்பு விபரம்

| வ.எண் | கிராமத்தின் பெயர் | ஆண்டு | பிறந்ததேதி | பதிவு செய்த தேதி |
|---|---|---|---|---|
| 56. | சின்னமனூர் | 1958 | 31.12.1957 | 01.01.1958 |
| | | | 30.12.1957 | 01.01.1958 |
| 57. | | 1959 | பதிவு இல்லை | பதிவு இல்லை |
| 58. | | 1960 | பதிவு இல்லை | பதிவு இல்லை |
| 59. | | 1961 | பதிவு இல்லை | பதிவு இல்லை |
| 60. | | 1962 | பதிவு இல்லை | பதிவு இல்லை |

பொதுத் தகவல் அலுவலர் மற்றும்
சார்பதிவாளர்
சின்னமனூர்.
2.11.2020

நகல்

1) உயர்திரு. மாநில தலைமை தகவல் ஆணையர் அவர்கள்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
எண்.2. தியாகராயர் சாலை,
(ஆலையம்மன் கோவில் அருகில்),
எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை – 600 018
(பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது)

2) பொதுத்தகவல் அலுவலர் மற்றும் "ஜி" பிரிவு கண்காணிப்பாளர்,
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்,
100, சாந்தோம் நெடுஞ்சாலை, சென்னை-600 028

சின்னமனூர் கிராமம் (1903 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு முடிய ஜனவரி 1ஆம் தேதி பதிவு செய்யப்பட்ட) பிறப்பு விபரம்

| வ.எண் | கிராமத்தின் பெயர் | ஆண்டு | பிறந்ததேதி | பதிவு செய்த தேதி |
|---|---|---|---|---|
| 56. | சின்னமனூர் | 1958 | 31.12.1957<br>30.12.1957 | 01.01.1958<br>01.01.1958 |
| 57. | | 1959 | பதிவு இல்லை | பதிவு இல்லை |
| 58. | | 1960 | பதிவு இல்லை | பதிவு இல்லை |
| 59. | | 1961 | பதிவு இல்லை | பதிவு இல்லை |
| 60. | | 1962 | பதிவு இல்லை | பதிவு இல்லை |

பொதுத் தகவல் அலுவலா மற்றும்
சார்பதிவாளர்,
சின்னமனூர்.
2.11.2020

நகல்

1) உயர்திரு. மாநில தலைமை தகவல் ஆணையர் அவர்கள்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
எண்.2. தியாகராயர் சாலை,
(ஆலையம்மன் கோவில் அருகில்),
எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை – 600 018
(பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது)

2) பொதுத்தகவல் அலுவலர் மற்றும் “ஜி” பிரிவு கண்காணிப்பாளர்,
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்,
100, சாந்தோம் நெடுஞ்சாலை, சென்னை-600 028

நகல் பெற்றுக்கொண்டேன்.

2/11/2020